# செய்தி வெளியீடு

வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்பவர்களது பணி பாதுகாப்பு உறுதிபடுத்தப்படுவதையும், அவர்களுக்குரிய ஊதியத் தொகையை பெறுவதில் சிக்கல் ஏற்படாமல் பாதுகாக்கவும், அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டு ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் சுரண்டல்களிலிருந்து பணி நாடுநர்களை பாதுகாக்கவும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தமது சிறப்பான சேவையை செய்து வருகிறது.

வெளிநாட்டில் வேலைக்குச் செல்ல விரும்புபவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பதிவுமுகாம்கள் நடத்துதல், வெளிநாட்டு வேலையளிப்பவர் சார்பாக நேர்காணல் ஏற்பாடு செய்தல், வெளிநாட்டுக்கு வேலைக்கு தேர்வு செய்யப்பட்டோருக்கு சான்றிதழ் சான்றொப்பம் மற்றும் விசா பெறுவதற்கு உதவி புரிதல், தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தேவையான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் செய்து வருகிறது.

இங்கிலாந்து நாட்டில் செவிலியர் பணிக்கு தொழில் முறை ஆங்கிலத் தேர்வு (Occupational English Test – OET) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்தேர்வினை எழுதுவதற்காக தமிழகத்திலுள்ள செவிலியர் பயிற்சி கல்லூரிகளில் இளநிலை இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்கள் 481 பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தமிழ்நாட்டுத் திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்களால் அவர்களது முழு பயிற்சி கட்டணமும் அரசால் ஏற்கப்பட்டு ரூ.87.50 இலட்சம் செலவில் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி வழங்கப்பட்டு வருகின்ற கல்லூரிகளில் சென்னை காட்டாங்கொளத்தூரில் உள்ள S.R.M. செவிலியர் பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெறும் மாணாக்கருடன் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்களும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களும் கலந்துரையாடும் போது மேற்படி பயிற்சி பெறும் மாணாக்கர்கள் தேர்வு எழுதுவதற்கான தேர்வு கட்டணத்தில் தமிழ்நாடு அரசு பங்களிப்பு வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

இந்தக் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்து, இங்கிலாந்து நாட்டில் செவிலியர் பணிக்குச் செல்ல தொழில் முறை ஆங்கிலத் தேர்வு எழுதவுள்ள மாணாக்கரது தேர்வு கட்டணச் சுமையை குறைக்கும் வகையில் முனைப்பான தேர்வர்களுக்கு ஒரு செவிலிய மாணவருக்கு ரூ.7,500/- வீதம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் வாயிலாக தொழில் முறை ஆங்கிலத் தேர்வு எழுதும் 481 மாணவ மாணவியர் பயன்பெறுவர்.

22/11/22

முனைவர் சி.நா.மகேஸ்வரன், இ.ஆ.ப
நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்.

பெறுநர்:
அனைத்து பத்திரிகை ஆசிரியர்கள்
மற்றும் ஊடகங்கள் – பொதுமக்களுக்கு பயன்பட
வெளியீடு செய்ய வேண்டுகோளுடன் அனுப்பப்படுகிறது.